மல்டி பினான்ஸ் பீஎல்சீ

MULTI FINANCE

2022 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை

இலாபம் அல்லது நட்டம் மற்றும் ஏனைய விரிவான வருமான அறிக்கை

மார்ச் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கானது (கணக்காய்வுக்கு உட்பட்டது)	2022 ரூபா	2021 ரூபா
வருமானம்	**120,357,181**	134,104,126
வட்டி வருமானம்	**111,453,969**	126,590,478
கழி: வட்டிச் செலவு	**(25,200,657)**	(42,830,661)
தேறிய வட்டி வருமானம்	**86,253,312**	83,759,817
கட்டண மற்றும் தரகுப்பண வருமானம்	**720,468**	735,079
ஏனைய செயற்பாட்டு வருமானம்	**8,182,744**	6,778,569
மொத்த செயற்பாட்டு வருமானம்	**95,156,524**	91,273,465
கடன்கள் மற்றும் ஏனைய நட்டங்களுக்கான பெறுமதி இழப்பு	**(155,667,981)**	(3,872,222)
நிகர செயற்பாட்டு வருமானம்	**(60,511,457)**	87,401,243
செயற்பாட்டுச் செலவினங்கள்		
ஆளணிச் செலவுகள்	**(75,797,743)**	(81,745,361)
ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் தேய்மானம்	**(23,863,969)**	(24,761,207)
கட்புலனாகாச் சொத்துக்களின் மதிப்பு நீக்கம்	**(615,074)**	(976,921)
ஏனைய செயற்பாட்டுச் செலவினங்கள்	**(38,707,890)**	(39,908,955)
மொத்த செயற்பாட்டுச் செலவினங்கள்	**(138,984,676)**	(147,392,444)
நிதிச் சேவைகள் மீதான வரி மற்றும் வருமான வரிக்கு முந்திய செயற்பாட்டு நட்டம்	**(199,496,133)**	(59,991,201)
நிதிச் சேவைகள் மீதான வரி	**(7,214)**	(2,902,110)
வருமான வரிக்கு முன்னரான நட்டம்	**(199,503,347)**	(62,893,311)
வருமான வரி செலவினம்	**-**	(19,706,223)
காலத்திற்கான நட்டம்	**(199,503,347)**	(82,599,534)
வருமான அறிக்கைக்கு மறுவகைப்படுத்தப்படும் ஏனைய விரிவான வருமானம்		
ஏனைய விரிவான வருமானம் மூலம் நியாயப் பெறுமதியை இலாபம் அல்லது நட்டம் என மறுவகைப்படுத்துதல்	**(50,308)**	(207,437)
ஏனைய விரிவான வருமானம் மூலம் நியாயப் பெறுமதியில் அளவிடப்பட்ட நிதிச் சொத்துக்களின் நியாயப் பெறுமதியில் நிகர மாற்றம் / (நட்டம்)	**-**	10,546
கழி: குறித்த பொருட்கள் மீதான ஒத்திவைக்கப்பட்ட வரி கட்டணம் / (தலைகீழ்)		
வருமான அறிக்கைக்கு மறுவகைப்படுத்தப்பட்ட நிகர ஏனைய விரிவான வருமானம்	**(50,308)**	(196,891)
வருமான அறிக்கைக்கு மறுவகைப்படுத்தப்படாத ஏனைய விரிவான வருமானம்		
வரையறுக்கப்பட்ட நன்மைத் திட்டங்களில் உண்மையான இலாபம் / (நட்டம்)	**4,512,590**	(660,791)
கழி: ஒத்திவைக்கப்பட்ட வரி கட்டணம் / (தலைகீழ்) உண்மையான இலாபம் / (நட்டம்)	**-**	158,590
வரையறுக்கப்பட்ட நன்மை திட்டங்களில் நிகர உண்மையான இலாபம் / (நட்டம்)	**4,512,590**	(502,201)
வருமான அறிக்கைக்கு மறுவகைப்படுத்தப்படாத நிகர ஏனைய விரிவான வருமானம்	**4,512,590**	(502,201)
ஆண்டிற்கான ஏனைய விரிவான வருமானம், நிகர வரி	**4,462,282**	(699,092)
ஆண்டிற்கான மொத்த விரிவான வருமானம், நிகர வரி	**(195,041,065)**	(83,298,626)
பங்கொன்றிற்கான இலாபம்/(நட்டம்) : அடிப்படை / நீர்த்த (ரூ.)	**(3.14)**	(1.30)

அடைப்புக்குள் உள்ள இலக்கங்கள் விளக்குகளை குறிக்கின்றது.

நிதிநிலை பற்றிய அறிக்கை

மார்ச் 31 இல் உள்ளவாறான (கணக்காய்வுக்கு உட்பட்டது)	2022 ரூ.	2021 ரூ.
சொத்துக்கள்		
காசு மற்றும் வங்கி மீதிகள்	**13,693,690**	23,195,923
காசு மதிப்பு நீக்கப்பட்ட செலவின் நிதிச் சொத்துக்கள் - கடன்கள் மற்றும் பெற வேண்டியவை	**254,667,027**	411,421,218
காசு மதிப்பு நீக்கப்பட்ட செலவின் நிதிச் சொத்துக்கள் - பெறவேண்டிய நிதிக் குத்தகை மற்றும் வாடகைக் கொள்முதல் சொத்துக்கள்	**82,196,194**	158,110,929
ஏனைய விரிவான வருமானம் மூலம் நியாயப் பெறுமதியில் அளவிடப்படும் நிதிச் சொத்துக்கள்	**2,500**	535,489
ஏனைய நிதிச் சொத்துக்கள்	**135,469,843**	119,229,696
ஏனைய நிதி அல்லாத சொத்துக்கள்	**37,534,569**	40,072,409
மீட்டெடுக்கப்பட்ட கையிருப்பு	**-**	4,090,270
பெற வேண்டிய வருமான வரி	**5,227,631**	5,227,631
முதலீட்டுச் சொத்து	**71,150,000**	68,333,000
ஒத்திவைக்கப்பட்ட வரி சொத்து	**-**	-
சொத்து, ஆலை மற்றும் உபகரணங்களும், பயன்பாட்டு உரிமை கொண்ட சொத்துக்களும்	**16,576,715**	39,401,866
கட்புலனாச் சொத்துக்கள்	**1,007,511**	524,860
மொத்தச் சொத்துக்கள்	**617,525,680**	870,143,291
பொறுப்புக்கள்		
வங்கிகளுக்குச் செலுத்த வேண்டியவை	**3,208,335**	3,128,745
காசு மதிப்பு நீக்கப்பட்ட நிதி பொறுப்புகள் - வைப்புச் செய்தவர்கள்	**253,824,754**	294,272,187
ஏனைய நிதிப் பொறுப்புகள்	**37,025,793**	53,490,242
ஏனைய நிதி அல்லாத பொறுப்புகள்	**17,796,298**	16,897,718
ஓய்வு நலக் கடப்பாடுகள்	**6,859,576**	8,502,410
மொத்தப் பொறுப்புக்கள்	**318,714,756**	376,291,302
பங்குரிமை மூலதனம்		
கூறப்பட்ட மூலதனம்	**898,375,289**	898,375,289
ஒதுக்கங்கள்	**16,655,272**	16,705,580
தக்கவைக்கப்பட்ட வருவாய் / (திரண்ட நட்டங்கள்)	**(616,219,637)**	(421,228,880)
மொத்தப் பங்குரிமை மூலதனம்	**298,810,924**	493,851,989
மொத்தப் பொறுப்புக்கள் மற்றும் பங்குரிமை மூலதனம்	**617,525,680**	870,143,291
ஒரு பங்கிற்கான நிகர சொத்துப் பெறுமதி (ரூ.)	**4.70**	7.76

அடைப்புக்குள் உள்ள இலக்கங்கள் விளக்குகளை குறிக்கின்றது.

தெரிந்தெடுக்கப்பட்ட முக்கிய செயலாற்ற குறிகாட்டிகள்

விடயம்	மார்ச் 31, 2022 இல் உள்ளவாறு		மார்ச் 31, 2021 இல் உள்ளவாறு	
ஒழுங்குமுறைப்படுத்தல் மூலதனப் போதுமை (%)	**உண்மை**	**தேவையானது**	**உண்மை**	**தேவையானது**
அடுக்கு 1 மூலதன போதுமை விகிதம்	67.61	7.00	53.18	6.50
மொத்த மூலதன போதுமை விகிதம்	67.61	11.00	53.18	10.50
வைப்பு பொறுப்புக்களுக்கான மூலதன நிதிய விகிதம்	116.68	10.00	163.74	10.00
கடன் சொத்துப்பட்டியலின் தரம் (%)				
மொத்தச் செயற்படாக் கடன்களின் விகிதம்	53.03		45.29	
தேறிய செயற்படாக் கடன்களின் விகிதம்	3.41		15.58	
மைய மூலதன விகிதத்திற்கான தேறிய செயற்படாக் கடன்களின் விகிதம்	7.86		24.22	
ஒதுக்கு பாதுகாப்பு விகிதம்	77.10		48.74	
இலாபத்தன்மை (%)				
தேறிய வட்டி இலாபம்	10.13		8.26	
சொத்துக்கள் மீதான வருவாய்	-32.31		-7.23	
பங்குரிமை மூலதனம் மீதான வருவாய்	-66.77		-16.73	
வருமானத்திற்கான செலவு விகிதம்	146.06		161.48	
திரவத்தன்மை (%)				
தேவையான திரவச் சொத்துகளுக்கான கிடைக்கத்தக்க திரவச் சொத்து (குறைந்தபட்சம் 100%)	451.38		586.57	
வெளிவாரி நிதியத்திற்கான திரவச் சொத்துக்கள்	44.99		35.23	
விஞ்ஞாபனத் தகவல்கள்				
கிளைகளின் எண்ணிக்கை	7		7	
வெளிவாரி கொடுகடன் தரமிடல்	[SL] C+(Negative) (ICRA)		[SL] C+ (ICRA)	
கடந்த 6 மாதங்களில் விதிக்கப்பட்ட ஒழுங்குமுறைப்படுத்தல் தண்டங்கள்	-		-	
தொகை (ரூ.மில்லியனில்)				
ஒழுங்குமுறைப்படுத்தல் வைப்புக் கட்டுப்பாடுகள்				
மொத்த வைப்புக்கள் மீதான உச்ச எல்லை (ரூ.மில்லியன்)	600		600	
வைப்புக்களின் அளவைக் குறைத்தல் மாதம் / காலாண்டு / ஆண்டு ஒன்றிற்கு (ரூ.மில்)	25		25	
வைப்புக்களை முடக்குதல்	-		-	
ஒழுங்குமுறைப்படுத்தல் கடன்பாடுகளுக்கான கட்டுப்பாடுகள்				
மொத்த கடன்பாடுகள் மீதான உச்ச எல்லை (ரூ.மில்லியன்)	-		-	
கடன்பாடுகள் சொத்துப்பட்டியல்கள் அளவைக் குறைத்தல் மாதம் / காலாண்டு / ஆண்டு ஒன்றிற்கு (ரூ.மில்)	-		-	
கடன்பாடுகளின் முடக்கம்	-		-	
ஒழுங்குமுறைப்படுத்தல் கடன் வழங்கல் கட்டுப்பாடுகள்				
மொத்தக் கடன் வழங்கல் சொத்துப்பட்டியல் மீதான உச்ச எல்லை (ரூ.மில்)	1300		1300	
கடன்வழங்கல் சொத்துப்பட்டியல்கள் அளவைக் குறைத்தல் மாதம் / காலாண்டு / ஆண்டு ஒன்றிற்கு (ரூ.மில்)	50		50	
புதிய கொடுகடன் வசதிகளை வழங்குதல் அத்துடன் / அல்லது ஏற்கனவே உள்ள கொடு-கடன் வசதிகளின் தவணைக் காலத்தை நீடித்தல் மீதான கட்டுப்பாடுகள்	-		-	
வேறு ஏதேனும் ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டுப்பாடுகள்	N/A		N/A	

உறுதிப்படுத்தல்:

மல்டி பினான்ஸ் பீஎல்சி இன் பணிப்பாளரகள் மற்றும் நிதி முகாமையாளருமாகிய நாம் கீழே கூட்டாகக் கையொப்பமிட்டு பின்வருவனவற்றை உறுதிப்படுத்துகின்றோம்.

(அ) மேற்கூறிய தகவல்கள் மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களுக்கும் விதிகளுக்கும் அமைவாக முறையாக தயாரிக்கப்பட்டுள்ளன.

(ஆ) இக்கூற்றுக்களில் அடங்கியுள்ள தகவல்கள், கணக்காய்வுக்கு உட்படாதவை எனக் குறிப்பிடப்பட்டிருந்தால் ஒழிய, உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகளின் கணக்காய்வுக்கு உட்பட்ட நிதியியல் கூற்றுக்களிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டவையாகும்.

(கையொப்பம்)	(கையொப்பம்)	(கையொப்பம்)
நிரோஷன் உடகே	**ரவீந்திர யட்டவர**	**நுவன் எதிரிவீர**
பணிப்பாளர்	பணிப்பாளர்	முகாமையாளர் - நிதி
2022 ஜுன் 30	2022 ஜுன் 30	2022 ஜுன் 30

2011 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க நிதி வர்த்தகச் சட்டத்தின் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் உரிமம் பெற்றது.

ஏதேனும் முரண்பாடு அல்லது வித்தியாசம் ஏட்பட்டால் ஆங்கிலப்பதிவை பார்க்கவும்.

2021/2022 நிதி ஆண்டுக்கான கே பி ம் ஜி கணக்காய்வாளரினால் வழங்கப்பட்ட கணக்காய்வு அறிக்கையின் தமிழ் மொழிபெயர்ப்பு.

KPMG

KPMG
(Chartered Accountants)
32A, Sir Mohamed Macan Markar Mawatha,
P. O. Box 186,
Colombo 00300, Sri Lanka.

Tel : +94 - 11 542 6426
Fax : +94 - 11 244 5872
+94 - 11 244 6058
Internet : www.kpmg.com/lk

சுயாதீனக் கணக்காய்வாளரின் அறிக்கை

மல்டி / பினான்ஸ் பி.எல்.சி. பங்குதாரர்களுக்கு

நிதியறிக்கைளின் கணக்காய்வு பற்றிய அறிக்கை

அபிப்பிராயம்

மல்டி / பினான்ஸ் பி.எல்.சி.யின் (“நிறுவனத்தின்”) நிதியறிக்கைகளை நாம் கணக்காய்வு செய்தோம். இந்த அறிக்கைகள் 2022 மார்ச் 31இல் இருந்தவாறான நிதி நிலைமை பற்றிய கூற்று, அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இலாபம் அல்லது நட்டம் மற்றும் னைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானக் கூற்று, பங்குரிமை மாற்றங்களின் கூற்று, பணப் பாய்ச்சல் கூற்று என்பவற்றையும் குறிப்பிடத்தக்க கணக்கியல் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்கள் உள்ளிட்ட குறிப்புகளையும் உள்ளடக்கியிருந்தன.

எமது அபிப்பிராயத்தின்படி, நிறுவனத்தின் 2022 மார்ச் 31இல் இருந்தவாறான நிதி நிலைமை, அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்பாடுகள் மற்றும் பணப் பாய்ச்சல் ஆகியவற்றை இந்த நிதியறிக்கைகள் இலங்கைக் கணக்கியல் நியமங்களுக்கு அமைவான முறையில் உண்மையாகவும் நியாயமாகவும் எடுத்துக்காட்டுகின்றன.

அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கைக் கணக்காய்வு நியமங்களுக்கு (SLAuSs) அமைவாகவே நாம் எமது கணக்காய்வை மேற்கொண்டோம். அந்த நியமங்களின் கீழுள்ள எமது பொறுப்புகள், எமது அறிக்கையிலுள்ள 'நிதியறிக்கைகளின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புகள்' என்ற பிரிவில் மேலும் விபரமாகத் தெரிவிக்கப்பட்டுள்ளன. CA ஸ்ரீலங்கா வெளியிட்டுள்ள நெறிமுறைக் கோவையின்படி, நாம் குழுமத்தில் தங்கியிருக்காத ஒரு சுயாதீன அமைப்பாகச் செயற்படுகின்றோம். அத்துடன், எமது ஏனைய நெறிமுறைப் பொறுப்புகளும் அந்த நெறிமுறைக் கோவைக்கு அமைவாகவே நிறைவேற்றப்பட்டுள்ளன. கணக்காய்வின் மூலம் நாம் பெற்றுக்கொண்ட சான்றுகள் எமது அபிப்பிராயத்தை வெளியிடுவதற்குப் போதுமான மற்றும் பொருத்தமான அடிப்படையை வழங்குகின்றன என்று நாம் நம்புகின்றோம்.

தொடர்ச்சியான செயற்பாடு தொடர்பில் நிலவும் முக்கிய நிச்சயமற்ற தன்மை

நிறுவனம் 2017இன் 02ஆம் இலக்க குறைந்தபட்ச கரு மூலதன பணிப்புரைக்கு இணங்கியொழுகவில்லை என்பதைக் குறிப்பிடும் நிதியறிக்கைகளின் குறிப்பு 45ஐ நாம் கவனத்திற்குக் கொண்டுவருகின்றோம். மேலும், நிறுவனத்தினால் தொடர்ச்சியாகப் பல வருடங்களுக்கு உறப்பட்ட இழப்புகளின் மொத்தம் 2022 மார்ச் 31இல் ரூ.616,219,637 ஆக திரண்டிருந்தது.

அது மாத்திரமன்றி, குறைந்தபட்ச கரு மூலதனத் தேவை தொடர்பான ஒழுங்குபடுத்தல் நிபந்தனைகள் இணங்கியொழுகப்படாதவரை, நிறுவனத்தின் கடன் வழங்கல் மற்றும் வைப்புச் செயற்பாடுகள் மீது இலங்கை மத்திய வங்கி வரையறைகளை விதித்துள்ளது. மேற்படி விடயங்கள் குறித்து நிறுவனம் இலங்கை மத்திய வங்கியுடன் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டுள்ளது.

கணக்கியலில் நிறுவனத் தொடர்ச்சி அடிப்படையைப் பிரயோகிப்பதற்காக, நிறுவனமானது இலங்கை மத்திய வங்கியின் உடன்பாட்டுடன் ஒழுங்குபடுத்தும் நிபந்தனைகளைப் பூர்த்திசெய்ய வேண்டும்.

ஆகவே, தொடர்ந்து இயங்குவதற்கு நிறுவனம் கொண்டுள்ள ஆற்றலைப் பாதிக்கும் முக்கிய நிச்சயமற்ற தன்மையானது, ஒழுங்குபடுத்தல் தேவைகளினால் நிர்ணயிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளைப் பூர்த்தி செய்வதிலேயே தங்கியுள்ளது. இந்த விடயம் தொடர்பில் எமது அபிப்பிராயம் மாற்றப்படவில்லை.

பிரதான கணக்காய்வு விடயங்கள்

முக்கிய கணக்காய்வு விடயங்கள் என்பது, எமது தொழில் நிபுணத்துவ ரீதியான முடிவின் பிரகாரம், நடப்புக் காலப்பகுதிக்கான நிதியறிக்கைகள் தொடர்பான எமது கணக்காய்வில் மிக முக்கியமானவை என்று கருதப்படும் விடயங்களைக் குறிக்கும். நிதியறிக்கைகள் தொடர்பான எமது ஒட்டுமொத்தக் கணக்காய்வின் சந்தர்ப்ப சூழ்நிலைக்கேற்பவே இந்த விடயங்கள் மீதும் கவனம் செலுத்தப்பட்டது. கணக்காய்வு தொடர்பான எமது அபிப்பிராயத்தை உருவாக்கும்போது இந்த விடயங்கள் பற்றி வெவ்வேறான அபிப்பிராயத்தை நாம் வழங்கவில்லை. தொடர்ச்சியான செயற்பாடு தொடர்பான முக்கிய நிச்சயமற்ற தன்மை என்பதில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களுக்கு மேலதிகமாக, கீழே விபரிக்கப்பட்டுள்ள விடயங்களை எமது அறிக்கையில் தொடர்பாடல் செய்யப்பட வேண்டிய முக்கிய கணக்காய்வு விடயங்களாக நாம் முடிவு செய்துள்ளோம்.

1. குத்தகைகள், வாடகைக் கொள்வனவு வருமதிகள், முற்பணங்கள் மற்றும் ஏனைய கடன்களுக்கான சீரிழப்பு ஏற்பாடுகள்.

குறிப்பு 4.2.10 (கணக்கியல் கொள்கைகள்) மற்றும் குறிப்பு 20.1இல் விபரிக்கப்பட்டுள்ளபடி, மாற்றப்பட்ட பெறுமதியிலான நிதிச் சொத்துகள் - கடன்கள் மற்றும் வருமதிகள், , மாற்றப்பட்ட பெறுமதியிலான நிதிச் சொத்துகள் - குத்தகை வாடகை வருமதிகள் மற்றும் வாடகைக் கொள்வனவுச் சரக்குகளுக்கான சீரிழப்பு ஏற்பாடு 2022 மார்ச் 31இல் ரூ.351,884,581 ஆகுமென நிறுவனம் கணிப்பீடு செய்துள்ளது.

இடர் விபரம்

சீரிழப்பு நட்டத்திற்கான ஏற்பாட்டைக் கணிப்பதற்கு, SLFRS 9 - நிதிப் பத்திரங்கள் என்ற கணக்கியல் நியமத்திற்கு அமைவான எதிர்பார்க்கப்பட்ட கடன் இழப்பு (ECL) முறையை நிறுவனம் பயன்படுத்துகின்றது.

ECL அளவைக் கணிப்பதில் மிகவும் சிக்கலான விடயங்களும் மதிநுட்பமான தீர்ப்புகளும் சம்பந்தப்பட்டுள்ளன. ECL முறையை SLFRS 9இன் தேவைப்படுத்தல்களுக்குப் பிரயோகிக்கும்போது, நிறுவனத்தினால் பல முக்கிய அனுமானங்கள் செய்யப்படுகின்றன. இழப்புக் கட்டம், தவறுகையின் எதிர்காலச் சாத்தியம் (PD), கடன் தவறுகை இழப்பு (LGD), தேவையான தரவு உள்ளீடுகளின் உபயோகம் தொடர்பான நிறையேற்றம் மற்றும் தீர்மானங்கள் உள்ளடங்கலான பொதுவான பொருளாதாரச் சூழ்நிலைகள் பற்றிய அனுமானங்களும் அவற்றில் அடங்கும்..

பொதுவான பொருளாதாரச் சூழ்நிலையின் நிச்சயமற்ற மற்றும் கொந்தளிப்பான தன்மை, கொவிட்-19 தொற்றுநோய் பரவலின் விளைவுகள் என்பவற்றின் காரணமாக பொருளாதாரக் கண்ணோட்டம் தொடர்பான அத்தகைய அனுமானங்களைச் செய்வது மிகவும் கடுனமாகும். அரசாங்கத்தின் பல்வேறு பதில் நடவடிக்கைகளும் இணைந்துள்ளதால், ECL மற்றும் அதனுடன் தொடர்புடைய கணக்காய்வு இடர்களைக் கணிப்பதில் நிறுவனத்திற்கு உயர் மட்டத்திலான தீர்ப்புத் திறன் தேவைப்படும்.

கடன்கள் மற்றும் வருமதிகள், குத்தகை மற்றும் வாடகைக் கொள்வனவு வருமதிகள் இந்த நிதியறிக்கைகளுக்கான மீதிகள் முக்கியத்துவம் வாய்ந்தவையாக இருப்பதாலும், ECL ஏற்பாடுகளைக் கணிப்பதற்கு நிறுவனம் பயன்படுத்திய நுஊடு முறை அதன் உள்ளார்ந்த இயல்பில் சிக்கலானதாக இருப்பதாலும், SLFRS 7 நிதிப் பத்திரங்கள்: வெளியீடுகள் என்ற நியமத்தில் குறிப்பிடப்பட்டுள்ளபடி தேவைப்படுத்தப்பட்ட வெளிப்படுத்தல்களின் மட்டம் உயர்வாக இருப்பதாலும் எதிர்பார்க்கப்பட்ட கடன் இழப்புகளுக்கான ஏற்பாட்டை நாம் ஒரு பிரதான கணக்காய்வு விடயமாக அடையாளம் கண்டோம்.

எமது கணக்காய்வுச் செயன்முறைகள் பின்வரும் நடவடிக்கைகளை உள்ளடக்கியிருந்தன:

- பேரளவுப் பொருளாதாரச் சூழலின் நிச்சயமற்ற மற்றும் கொந்தளிப்பான நிலைமையை விசேடமாகக் கருத்திற்கொண்டு, சீரிழப்பு மொடல்களில் உள்ளடங்கியிருக்கும் முறையை SLFRS 9 நியமத்தின் தேவைப்படுத்தல்களுடன் ஒப்பிட்டு மதிப்பீடு செய்தல்
- ஸ்டேஜிங், PD மற்றும் LGD உட்பட மொடல்களிலுள்ள முக்கிய அனுமானங்களைப் பரிசீலனை செய்து, முகாமைத்துவத்தின் முக்கிய தீர்ப்புகள் மற்றும் கணிப்பீடுகளை மதிப்பீடு செய்தல்
- கணனி அமைப்புகள் மற்றும் ECL மொடல்களுக்கான உள்ளீடுகளின் சரிநுட்பம் மற்றும் பூரணத்துவத்தைப் பரீட்சித்தல் மற்றும் அவற்றில் பயன்படுத்தப்பட்ட தகவல்கள், எதிர்கால நிலைமைகள் தொடர்பில் பிரயோகிக்கப்பட்ட நிறையேற்றங்கள் என்பவற்றைப் பரிசீலித்தல்
- PD மற்றும் LGD போன்ற மொடல்களில் பயன்படுத்தப்பட்ட முக்கிய அனுமானங்களைப் பயன்படுத்தி, சாம்பிள் அடிப்படையில் ECL அளவை மீளக் கணித்தல்.
- பொதுவான பொருளாதாரச் சூழ்நிலையின் நிச்சயமற்ற மற்றும் கொந்தளிப்பான தன்மை, கொவிட்-19 தொற்றுநோய் பரவலின் விளைவுகள் என்பன தொடர்பில் நிறுவனம் எடுத்த முடிவுகளின் நியாயத்தன்மையை மதிப்பீடு செய்தல்
- ஸ்டேஜிங், PD மற்றும் LGD உட்பட ECL மொடலின் முகாமைத்துவத்தையும் ECL மொடல் தொடர்பான எதிர்நோக்கும் காரணிகள், அனுமானங்கள் மற்றும் முகாமத்துவ மேலாண்மைகளையும் மதிப்பீடு செய்வதற்கு எமது உள்ளக ஆலோசனை நிபுணர்களுடன் இணைந்து செயற்படுதல்.
- ஏற்புடைய கணக்கியல் நியமங்களுக்கு இணங்கியொழுகும் வகையில் நிதியறிக்கைகளில் செய்யப்பட்டுள்ள வெளிப்படுத்துதல்களின் போதுமையை மதிப்பீடு செய்தல்.

ஏனைய தகவல்கள்ள

ஏனைய தகவல்களுக்கான பொறுப்பு முகாமைத்துவத்தைச் சார்ந்ததாகும். ஏனைய தகவல்கள் இந்த நிதியறிக்கைகளில் உள்ளடக்கப்படவில்லை.

நிதியறிக்கைகள் பற்றிய எமது அபிப்பிராயம் ஏனைய தகவல்களை உள்ளடக்கவில்லை. அவை தொடர்பில் எவ்வகையான உறுதியளிப்பு முடிவையும் நாம் வழங்குவில்லை.

நிதியறிக்கைகள் தொடர்பில் முகாமைத்துவத்தின் மற்றும் நிர்வாகப் பணி ஒப்படைக்கப்பட்டவர்களின் பொறுப்புகள்

இலங்கைக் கணக்கியல் நியமங்களுக்கு அமைவாக உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை எடுத்துக்காட்டும் நிதியறிக்கைகளைத் தயாரித்தல், மோசடி அல்லது தவறு காரணமான பெரிய முரண்பாடு எதுவுமற்ற நிதியறிக்கைகள் தயாரிக்கப்படுவதற்கு அவசியமென முகாமைத்துவத்தினால் தீர்மானிக்கப்படும் உள்ளகக் கட்டுப்பாடுகளை நிறுவுதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாகும்.

குழுமத்தைக் கலைத்துவிடுவதற்கு அல்லது அதன் செயற்பாடுகளை நிறுத்துவதற்கு முகாமைத்துவம் உத்தேசித்திருந்தாலன்றி, அல்லது அவ்வாறு செய்வதைவிட வேறு மாற்றுவழி இல்லாத பட்சத்தில், தொடர்ந்து செயற்படுவதற்கும் தொடர்ச்சியான செயற்பாடு தொடர்புடைய ஏற்புடைய விடயங்களை வெளிப்படுத்துவதற்கும் தொடர்ச்சியான செயற்பாட்டைக் கணக்கியலுக்கு அடிப்படையாகப் பயன்படுத்துவதற்கும் குழுமம் கொண்டுள்ள ஆற்றலை நிதியறிக்கைகள் தயாரிக்கப்படும் வேளையில் மதிப்பீடு செய்வது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிறுவனத்தினதும் குழுமத்தினதும் நிதி அறிக்கையிடல் நடைமுறைகளை மேற்பார்வை செய்வது நிர்வாகப் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளவர்களின் பொறுப்பாகும்.

நிதியறிக்கைகளின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளர்களின் பொறுப்புகள்

ஒட்டுமொத்தமான நோக்கில், நிதியறிக்கைகள், மோசடி அல்லது தவறு காரணமான ஏதேனும் முக்கிய பிழையான அறிக்கையிடல் அற்றதாக உள்ளதா என்பது குறித்து நியாயமான உறுதியைப் பெற்றுக்கொள்வதும் எமது அபிப்பிராயத்தை உள்ளடக்கிய கணக்காய்வாளரின் அறிக்கையை வெளியிடுவதுமே எமது இலக்குகளாகும். நியாயமான உறுதி என்பது உயர் மட்டத்திலான நம்பிக்கையாகும். ஆனால், SLAuS நியமங்களுக்கு அமைவாக மேற்கொள்ளப்பட்ட ஒரு கணக்காய்வு நிதியறிக்கைகளில் உள்ள ஏதேனும் முக்கிய தவறான கூற்று எப்போதும் கண்டுபிடிக்கும் என்பதற்கு உத்தரவாதமில்லை. பிழையான கூற்று என்பது மோசடியிலிருந்து அல்லது ஏதேனும் தவறிலிருந்து எழக்கூடும். தவறான கூற்றுகள், தனித்தனியாக அல்லது கூட்டாக, இந்த நிதியறிக்கைகளின் அடிப்படையில் பயனாளிகள் எடுக்கும் தீர்மானங்கள் மீது செல்வாக்கைச் செலுத்தக்கூடும் என்று நியாயமான முறையில் எதிர்பார்க்கப்படுமாயின், அவை முக்கிய பிழையான கூற்றுகளாகக் கொள்ளப்படும்.

SLAuS நியமங்களுக்கு அமைவான கணக்காய்வின் ஒரு பகுதியாக, நாம் கணக்காய்வு முழுவதிலும் தொழில் நிபுணத்துவ ரீதியான முடிவுகளைப் பிரயோகிப்பதோடு, தொழில் நிபுணத்துவ ரீதியான சந்தேகத்தையும் பேணுகின்றோம். அத்துடன், நாம்:

- மோசடி அல்லது தவறு காரணமான முக்கிய பிழையான கூற்றுக்களின் இடர்களை இனங்கண்டு மதிப்பீடு செய்கின்றோம். அத்தகைய இடர்களுக்கான பதில் நடவடிக்கையாகக் கணக்காய்வுச் செயன்முறைகளை வகுத்துச் செயற்படுத்துகின்றோம். எமது அபிப்பிராயத்திற்கன அடிப்படையை வழங்குவதற்குப் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்கின்றோம். மோசடியின் விளைவான முக்கிய பிழையான கூற்று தவறொன்றின் விளைவான தவறான கூற்றை விட இடர் கூடியதாகும், ஏனெனில், ஒரு மோசடியில் சதி, போலி ஆவணம், வேண்டுமென்றே செய்யப்பட்ட தவறுகைள், தவறான பிரதிநிதித்துவங்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளின் மீறல்கள் சம்பந்தப்பட்டிருக்கலாம்.
- நிறுவனம் மற்றும் குழுமத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்றிறன் பற்றிய அபிப்பிராயத்தை வெளியிடும் நோக்கத்திற்காக அல்லாமல், சந்தர்ப்ப சூழ்நிலைக்கும் பொருத்தமான கணக்காய்வுச் செயன்முறையை வடிவமைப்பதற்காக, கணக்காய்வுக்கு ஏற்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகளின் புரிந்துணர்வைப் பெற்றுக்கொள்கின்றோம்.
- பயன்படுத்தப்பட்ட கணக்கியல் கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கியல் கணிப்பகள் மற்றும் முகாமைத்துவத்தினால் செய்யப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் நியாயத் தன்மை என்பவற்றை மதிப்பீடு செய்கின்றோம்.
- கணக்கியலில் முகாமைத்துவம் பயன்படுத்திய தொடரும் செயற்பாட்டு அடிப்படையின் பொருத்தத் தன்மை குறித்தும் செயற்பாட்டைத் தொடர்வதற்கு குழுமம் கொண்டுள்ள ஆற்றலில் சந்தேகத்தை ஏற்படுத்தக்கூடிய ஏதேனும் முக்கியமான நிச்சயமற்ற நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் உள்ளனவா என்பது குறித்தும் முடிவு செய்கின்றோம். ஏதேனும் நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதென நாம் முடிவு செய்தால், நிதியறிக்கைகளிலுள்ள சம்பந்தப்பட்ட வெளிப்படுத்தல்கள் குறித்து நாம் எமது கணக்காய்வு அறிக்கையில் கவனத்திற்குக் கொண்டுவர வேண்டும். அல்லது அத்தகைய வெளிப்படுத்தல்கள் போதாமலிருந்தால் எமது அபிப்பிரராயத்தை மாற்ற வேண்டியிருக்கும். எமது முடிவுகள், எமது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரை பெறப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை ஆதாரமாகக் கொண்டவையாகும். எனினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக குழுமம் ஒரு தொடரும் அமைப்பாகச் செயற்பட முடியாத நிலையை உண்டுபண்ணக்கூடும்.
- வெளிப்படுத்தல்கள் உள்ளிட்ட நிதியறிக்கைகளின் ஒட்டுமொத்தச் சமர்ப்பணம், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்தையும் நியாயமான சமர்ப்பணத்தை எய்தக்கூடிய முறையில் சம்பந்தப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதியறிக்கைகள் பிரதிநிதித்துவம் செய்கின்றவா என்பதையும் மதிப்ப